# புதியதொரு வாழ்க்கைக்குரிய படிக்கற்கள்



இங்கே நான் எப்படி வந்து சேர்ந்தேன்? என் வாழ்க்கையில் ஏதோ ஒரு குறை உண்டென்று தென்படுவது ஏன்? நான் கண்டு கொண்டவைகளுக்கு அப்பாற்பட்ட, ஏதேனும் வாழ்க்கையுண்டா? இறப்பிற்குப் பின் எனக்கென்ன நேரும்?.

ஒரு முறையன்றேல் பிறிதொரு முறைஇவ் வினாக்கள் உங்கள் மனதிலும் எழுந்திருக்கலாம். ஒருவேளை இவையில் ஏதோ ஒரு கேள்வி இப்பொழுது உங்களை அலட்டிக் கொண்டிருக்கவும் கூடும். இதனிடையே உரிய விடையை கண்டு கொண்டேன் என்றஒரு தோற்றம், ஏதோ ஒரு காலத்தில் உங்களுக்கு வந்திருக்கலாம். ஆனால் அந்த பிரமை நெடுநாள் நீடிக்கவில்லை. ஏதோ ஒரு தவறு என்னை ஆட்கொள்கிறது அது என்னவென்றோ அதனை எங்கே கண்டு கொள்வேமென்றோ அறியீர்கள். ஏதோ ஒரு கலக்கம் உண்டென்பதை அறிவீர்கள். ஆனால் அதனை எப்படி செய்யலாம் என்பதை அறியீர்கள். நீங்கள் பெறுகின்றஒவ்வொரு பதிலும், ஒவ்வொரு உறவும், ஒவ்வொரு அனுபவமும் உங்களுக்கு இன்மையை மட்டுமே தருகின்றது. ஆகவே அது பற்றிய உங்கள் நோட்டமும் நாட்டமும் தேட்டமும் இன்னமும் தொடர்கின்றன. என்ன குறை என்பதல்ல; யாருடைய குறைஎன்பதே பிரச்சினை!

அனேகரைப் பொறுத்த மட்டிலும் அவர்கள் முன் உள்ள மிகப்பெரிய கேள்வி இறைவன் என்பவர் யார் என்பதாகும்...!

இறைவன் ஒருவரே உங்களைப் படைத்தவர். அவரால் மட்டும் நிரப்பப்படுகிற ஓரிடம் உங்களிடத்திலுள்ளது. கடவுளின் சாயலில் படைக்கப்பட்ட மனிதனிடத்தில் அவ்விடம ாவது அவரைக்குடியிருத்துவதற்காக மட்டுமே காத்துக்கொண்டிருக்கிறது.



இறைவன் என்பவர் ஒரு தத்துவக் கோட்பாடு அல்ல. கற்பனை வடிவுமல்ல, இறைவன் என்பவர் அண்ட சராசரங்களை படைத்தவர். அவர் உங்களிடத்தில் மிகவும் அன்பு கூருகிறார். நீங்கள் உருவான வினாடியிலி ருந்து உங்களு டைய ஊனியல்வுகளையும், உங்கள் வாழ்க்கை யின் இறந்தகால-நிகழ் கால-எதிர்கால நிகழ்வுகளையும் அவர் நன்கறிவார். இறைவாக்காகிய மறைநூலில் உங்கள் தலை மயிரின் எண்ணிக்கை யையும், இதயத்தின் நினைவுகளும் யாவும் அவர் அறிவார் என்றுள்ளது.

உங்கள் இதயத்தில் ஏதோ ஒரு இன்மையும் ஒரு தாழ்வு உணர்ச்சியும் தென்படுகிறதல்லவா... அதன் காரணம் நீங்கள் இறைவனிடமிருந்து தொலை வில் நிற்பதாகும். அவை பாவத்தின் விளைவால் தோன்றியவை வயாகும். சுயநலம், சிற்றின்ப உணர்வுகள், தகாச் செயல்கள் ஆகியவற்றின் மூலாதாரம் இந்த ஏதோ இழிவான நிலமையே ஆகும்.

## அவை இவ்வண்ணம் நடைபெற்றது..!

ஆதியிலே இறைவன் பூமியில் ஒரு ஆடவனையும் பெண்மணியையும், ஆம் ஆதாமையும், ஏவாளையும் படைத்தார். இறைவனோடுள்ள நட்புறவினை அவர்கள் சுவைத்தனர். இறைவனோடு சேர்ந்து நடந்து, உரையாடி, தூய்மையோடு எழில்மிக்க ஏதேனில் மனமகிழ்வோடும் வாழ்ந்து வந்தனர்.

இறைவன் அவர்களுடைய தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்தார். அத்துடன்

ஆதாம்-ஏவாள் தம்பதியினருக்கு ஒரு நிபந்தனையும் வைத்தார். ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை மட்டும் புசிக்க வேண்டாம். அவர்களோடுள்ள அன்பினிமித்தமே அவ்விதம் ஒரு கட்டளை அவர்களுக்கு அளிக்கப்பட்டது. ஏனெனில் அதுவரையிலும் ஆதாமும் ஏவாளும் நன்மையை மட்டுமே அறிந்திருந்தனர். தீமையைப் பற்றிய அறிவு அவர்களை வேதனைக்குள்ளாக்குமென அவர் நன்கறிவார். இருப்பினும் அவர்கள், கீழ்படியவோ அதை மீறவோ உள்ள உரிமையோடு கூடவே படைக்கப்பட்டனர். அவர்களோ மீறுதலையே தேர்ந்தெடுத்தனர். தடை செய்யப்பட்ட மரத்தின் கனியைப் புசித்தனர். அதன் விளைவாக பாவம் அவர்கள் இதயத்தில் உடபுகுந்தது. இறைவன் பாவத்தை வெறுக்கிறவர். ஆகவே பாவம் அவர்களை இறைவனின் நட்புறவிலிருந்து பிரித்தது.

ஆதாம் - ஏவாளின் வமிசாவளியினர் இவ்வுலகினில் பிறக்கிறஒவ்வொருவரும் முன்னோரின் பாவ இயல்பினை உடையோராயினர். மனிதர் நன்மையை செய்ய விரும்புவதற்கு மாறாக தீமையைச் செய்யும் விருப்பத்துடன் வாழ்கின்றனர். மனிதன் ஒரு குறிப்பிட்ட பருவம் அடைகையில் பாவத்தை செய்வதற்கு (தெய்வீக உடன்படிக்கையை மீறுவதற்கு) முடிவு செய்கின்றான். பாவம் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ வரலாம். ஆனால் அது எக்காலத்திலும் இறைவனி டமிருந்து மனிதனை பிரிக்கின்றது. பாவத்தின் இறுதியான தண்டனை, இரண்டாம் மரணமாகிய நரகமாகும். அது இறைவனிடமிருந்து என்றென் றைக்குமான அகற்சியாகும். ஆனாலும் காரியங்கள் அத்துடன் முற்றுப்பெறவில்லை லயென்பது நம்மை



ஆற்றுகிறது.

பாவத்தினிமித்தம் நேர்ந்த இவ்வகற்சியை அகற்றஆண்டவர் அரிதான வழியொன் றைஆயத்தம் செய்துள்ளார். அதற்கு ஏற்ப இறைவன் நம்மீது இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். தம்முடைய திரு மைந்தனாகிய இயேசு பெருமானை ஒரு மனிதனை போல வாழ, இவ்வுலகிற்கு அனுப்பி நம்முடைய பாவங்களுக்காக அவரை கருணை (கிருபாதார) பலியாக்கினார். பாவத்தின் தண்டனை இரண்டாம் மரணமாகிய நரகமாகும். இயேசு பெருமான் பாவமில்லாத பரிசுத்தரவார் எனவே அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து, நமது மீட்பிற்குரிய விலையைக் கொடுக்கும் பொருட்டு அவர் மனிதருக்காய் உயிர் கொடுத்து, மூன்றாம் நாளினிலே உயிர்த்தெழுந்து பூமியில் உலாவி அனேகருக்கு காட்சியுமளித்தார். அவருடைய உயிர்த்தெழுதலுக்கு நூற்றுக்கணக்கானோர் சாட்சிகளாவர். இப்பொழுது அவர் விண்ணகத்தில் பிதாவாகிய தெய்வத்தின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார்.

ஆயினும் இயேசுப் பிரான் உயிர்நீத்து மூன்றாம் நாளினில் உயிர்த்தெழுந்ததனால் மட்டும் மக்களினத்தின் பாவங்கள் மன்னிக்கப்படாது. இறைவனிடத்திலுள்ள மனிதரின் அகற்சி தவிர்க்கப்படவும் செய்யாது.

இயேசுவின் மரணத்தைப் பற்றிய அறிவு மட்டும் ஒருவனின் இரட்சிப்பிற்குப் போதுமானதல்ல, இயேசுவின் மரணம்; தன் பாவத்திற்கென; விசுவாசித்து, இயேசுவை கர்த்தரும் இரட்சகருமாக தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்ளுகிறவன் எவனோ அவன் மட்டுமே



இரட்சிக்கப்படுவான்.

## உங்களுக்கு எப்படி கர்த்தரண்டையில் சென்று பாவமன்னிப்பைப் பெறலாம்?

நீங்கள் இவ்விலக்கை அடைவதற்குரிய சில படிக்கற்களை மறைநூல் சுட்டிக்காண் பிக்கின்றன. உண்மையோடும் உள்ளூரவும் நீங்கள் இந்த படிக்கற்களைக் கடக்கையில் கர்த்தர் பெருமான் உங்கள் பாவங்களை மன்னித்த ருளினார் என்னும் இரட்சிப்பின் நிச்சயத்தை அடைவீர்கள். அந்த அனுபவமே இரட்சிப்பு. இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெறுகின்றஅதே நொடியில் இறைவனுக்கும் உங்களுக்குமிடையே தடைச் சுவரென நின்றபகைமை தகர்க்கப்படும், இதயத்தின் இன்மை மறைந்து போம், இதயத்தில் பேரமைதி நிலவும். இறையச்சமும், பிறரிடம் அன்பும் மிளிரும். வாழ்க்கையில் நீடிய பொறுமையும் மறுமலர்ச்சியும் பட்டறிவாகும். இவ்வினிய அனுபவத்தின் சாட்சிகளாக எண்ணிற்கரியோர் உள்ளனர். எனவே இது மெய்மை என உலகிற்கு அறிவுறுத்த ப்படுகிறது.

## பாவமன்னிப்பைப் பெறவிரும்புவோர் செய்ய வேண்டியதாவன.

பாவமன்னிப்பு இன்றியமையாதது என்று அறிந்து கொள்ளுதல். நீங்கள் ஒரு பாவி என்பதையும், தெய்வகிருபை உங்களுக்கு அவசியம் என்பதையும் ஒப்புக்கொள்ளுக. எல்லாரும் பாவஞ்செய்து தெய்வ மகிமையற்றவர்களாயினர் (ரோமர் 3:23) என்பது மறைநூலின் கூற்று. லூக் 18:13-ல் ஒருவருடைய மன்றாட்டு இவ்விதமாகும் தேவரீர் பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்.உள்ளுடைந்து பாவத்தை அறிக்கை செய்தல்.

உங்களுடைய பாவ இயல்பு பற்றி உண்மையி லேயே உள்ளுடைந்து, உடனிரங்கி அவற்றைப் பொறுத்தருள் இறைவனிடம் மன்றாடுக.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையி ட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவா. 1:9) ஆகையால் உங்களுடைய பாவங்கள் ஒழியும் பொருட்டு மனந்திருப்பிக் குணப்படுங்கள் (அப்போ. 3:20).

## பாவங்களை விட்டு விலகுதல்.

இறைவனின் இரக்கத்தால் வாழ்க்கையி லுள்ள அனைத்து பாவங்களையும் விட்டு விலகலாமெ ன்று உறுதிகொள்ளுக. ஏசா. 55:7-ல் இவ்வாறு உள்ளன. தீயவன் தன் தீ நெறிகளையும் அநீதன் தன் எண்ணங்களையும் தள்ளி விட்டு ஆண்டவரி டம் திரும்பி வரட்டும். அவன் மேல் அவர் இரக்கம் காட்டுவார். நம்முடைய கடவுளிடம் வரட்டும், ஏனெனில் மன்னிப்பு வழங்குவதில் அவர் வள்ளல் இது ஒரு வாக்குறுதியாகும்.

## இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தல்.

முதலாவது இயேசு கிறிஸ்து உங்களுடைய பாவங்களுக்காக உயிர்நீத்தார் எனவும் அவர் இன்றும் ஜீவிக்கிறார் எனவும் விசுவாசிக்க வேண்டும். அத்துடன், உண்மையோடும், ஒளிவு மறைவின்றியும் இங்கே சுட்டிக்காண் பிக்கப்பட்டு ள்ள படிக் கற்களை ஏறுகையில் இறைவன் உங்கள் மன்றாட்டினைக் கேட்டு மீட்டுக் கொள்ளுவார் எனவும் விசுவாசிக்கி வேண்டும். தம்முடைய ஒரே பேறான திருக்குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் முடிவில்லா



வாழ்வை பெறும் பொருட்டு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகின்மேல் அன்புகூர்ந்தார். (யோவா. 3:16)

## இயேசு கிறிஸ்துவை உங்கள் இதயத்திலும் வாழ்க்கையிலும் அழைத்தல்.

முழு இதயத்தோடு முன் கூறிய படிக்கற்களை கடந்து ஆண்டவரிடத்தில் சென்று முற்றிலும் உண்மையோடு உங்களை அற்பணித்தால் நீங்கள் இறைவனுடைய ஒரு பிள்ளையாக மாறுவீர்கள். உங்கள் உள்ளத்தின் உட்தளத்தினின்று கீழ்க் கொடுத்தாற்போன்று வேண்டுதல் செய்யுங்கள்.

அன்பான தேவரீர், நீவிர் என்னிடத்திற் அன்பு கூருவதற்காக நன்றி. உமது திருப்புதல்வராகிய இயேசு பிரான் எனக்காக உயிர்நீத்து உயிர்த்தெ ழுந்து ஜீவிக்கிறார் என நான் நம்புறேன். நான் ஒரு பாவியெனவும் நீவிர் பாவத்தை வெறுக்கிறவர் எனவும் நான் அறிகிறேன். பாவத்தை விட்டு விலகிய நான் இனி ஒரு போதும் பழைய வாழ்க்கை கயை திரும்பி நோக்காமலிருக்க வேண்டுமெ ன்பதே என் விழைவு என் வாழ்க்கையில் வந்து போன எல்லா தீச்செயல்களையும் தீய எண்ணங்க ளையும் தயை கூர்ந்து பொறுத்தருளும். நீவிர் என் வாழ்க்கையில் வந்து என் கர்த்தரும் இரட்சகருமாக இருப்பீராக. எஞ்சிய ஆயுட் நாட்களில் உம்முடைய திருவுளத்திற்கு உகந்த நிலையில் தொடர விரும்புகி றேன். நீவிர் தாமே வழிகாட்டியருளும். இன்று முதல் உம்மை பின் செல்லவும் உமக்கேற்றசெயல் புரியவும் என்னை தாங்கியருளும். என் ஜெபத்தை தக் கேட்டு பதில் தந்தமைக்கு நன்றி. இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வேண்டுகிறேன். ஆமென்.

நீங்கள் உண்மையோடும் முழுவிசுவாசத்தோடும் இதயத்தின் ஆழத்தி னின்று இந்த வேண்டுகோளை ஏறெடுத்தது ண்டானால் நீங்கள் இரட்சிக்கப்பட்டு இறைவனுடைய பிள்ளையாக மாறியுள்ளீர்கள். திருமறைதெளிவுறுத்துகிறது. நாம் இறைவனின் பிள்ளைகளாயிருக்கிறோம் என்று, ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனே கூட சான்று பகிர்கின்றார். (ரோமர் 8:16). அப்போது நீங்கள் சந்தோஷத்தையும் விடுதலையின் பட்டறிவையும் அடைவீர்கள். உள்ளுணர்த்தலும், தாழ்வுணர்ச்சியும், இதயச்சுமையும் இருந்த இடத்தினை, மனமகிழ்ச்சியும் மனநிறைவும் நிரப்புகிறது. பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்னும் நிச்சயத்தைப் பெற்றால், நீங்கள் இறைவனிடமிருந்து தொலைவிலல்ல தொடர்ந்து நீங்கள் என்ன செய்ய வேண்டும்.

## இறைவாக்காகிய மறைநூலில் ஒன்றினை சொந்தமாக்குக

புதிய ஏற்பாட்டில் தூய யோவான் எழுதிய நற்செய்தி நூலிலிருந்து படிக்கத் துவங்குங்கள். இயேசு பெருமானின் இம்மண் ணுலக வாழ்க்கையைப் பற்றியும், உங்களை இறைவனிடம் ஒப்புரவாக்கும் பொருட்டு அவர் உயிர் நீத்தது பற்றியும் அதிலிருந்து உங்களுக்குப் புலனாகும்.

## இறைவனிடம் பேசத்துவங்குக

அன்றாடம் உங்கள் ஜெபத்தைக் கேட்கவும், நீங்கள் இறைவனுக்கு ஏற்புடை யோராய் நடக்கவும் அவர் விரும்புகிறார். ஒரு தோழரோடு பேசுவதைப் போல உங்களுக்கு இறைவனிடம் உரையாட முடியும்.



## உடன் விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளுக

இயேசு பிரானுக்காக வாழ்க்கையை அற்பணம் செய்த ஏனையோருடனுள்ள நட்புறவு உங்களுக்கு ஆன்மீக பெலனும் ஊக்குவித் தலுமாகும்.

## இறைவனுக்கென்று வாழ உறுதிகொள்ளுக

இறைவனோடுள்ள நட்புறவு விடுபடாமற் பாதுகாக்கவும் வேறெதையும் விட, நட்புறவுக்கு மதிப்பளிக்கவும் அற்பணம் செய்க. நாம் வாழும் சூழலில் இறைவனை விட்டு விலகும். சாத்தியக்கூறுகள் இருப்பதால் அவ்விதம் உங்களுக்கு நேர இடங்கொடாதீர். உங்களுக்கு உள்ளூர விருப்பமிருப்பின் இரட்சணியத்தின் மகிழ்ச்சியில் தொடர இறைவன் உங்களுக்கு துணை புரிவார்.

## இத்துணை பெரிதான இரட்சணியத்தைக் குறித்து பிறரிடம் தெரியப்படுத்துக

குறைந்தபட்சம் நீங்கள் நெருங்கிப் பழகுகிறவர்களிடமேனும் உங்களுக்குண்டான இந்த பட்டறிவ தெரியப்படுத்த விரும்புவீர்கள்.

இறைவன் உங்களுடைய வாழ்க்கையில் எதைச் செய்தார் என்பதையறிய நாங்களும் விரும்புகின்றோம். கீழ்க்கொடுத்துள்ள விலாசத்தில் எங்களுக்கு கடிதம் எழுதுக. இறைவனோடு இன்னுமதிகம் கிட்டிச்சேர ஊக்குவிக்கும் பிறவெளியீடுகளை உங்களுக்கு அனுப்பி வைப்போம்.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India